**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.வாசுதேவன் | **PW–66** | தொழில் | – |
| த/க பெயர் | – | | வயது | – |
| கிராமம் | – | | | |
| தாலுக்கா | – | | | |

**(எதிரிகள் ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் 04.08.2025ஆம் தேதி முதல் சென்னையில் தொழிலாளர் துணை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அரசு கலைக்கல்லூரி தேவனாம்பட்டினத்தில் பி.ஏ பட்டப்படிப்பு பயின்றேன். அதன் பின்னர் தொலைத்தொடர் கல்வி அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ பயின்றேன். அதே பல்கலைக்கழகத்தில் டிப்ளமோ இன் லேபர் அட்மினிஸ்ட்ரேஷன் லா பயின்றேன். மேலும் டாக்டர் எம்ஜிஆர் கூட்டுறவு பட்டய பயிற்சி நிலையத்தில் டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் மற்றும் டிப்ளமோ இன் கார்ப்பரேஷன் படித்தேன் 20.11.1996 ஆம் தேதி ஆண்டியார் பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.12 18:22:10 +0530

வங்கியில் பொது விநியோகத் திட்ட விற்பனையாளராக பணிபுரிந்தேன். அதன் பின் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தேர்வில் கலந்துகொண்டு உதவியாளராக தேர்ச்சி பெற்று 27.11.2010 முதல் 11.03.2012 வரையில் பணிபுரிந்தேன். 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற இந்து சமய அறநிலையத்துறையில் 12.03.2012 முதல் 14.04.2013 வரை தணிக்கை ஆய்வாளராக பணிபுரிந்தேன். மேலும் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 தேர்வில் கலந்து தேர்ச்சி பெற்று தொழிலாளர் துறையில் தொழிலாளர் உதவி ஆய்வாளராக 15.04.2013 முதல் பணிபுரிந்து வந்தேன். தற்போது பதவி உயர்வு மூலம் அதே துறையில் துணை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22 ஆண்டுகளாக நான் வோடபோன் அலைபேசி எண் 9626440609 பயன்படுத்தி வருகிறேன். என்னை இந்த வழக்கில் சிபிசிஐடி காவல்துறை துணை கண்காணிப்பாளர் எதற்காக விசாரித்தார் என்று தெரியுமா என்றால் ஆமாம், 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி தேர்வு வினாத்தாள் தேர்வுக்கு முன்பு லீக் ஆனது தொடர்பாக அழைத்து விசாரித்தார்.

**1-ம் எதிரி தரப்பில் தரப்பில் குறுக்கு விசாரணை:-** இல்லை.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.12 18:22:15 +0530

என்னுடைய அலைபேசி எண்ணில் கால் டீடைல்ஸ் எதுவும் என்னிடம் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரி.

**4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22 முதல் 24, 26 முதல் 30-ம் எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை 2, 3, 10, 13, 14, 15, 16, 20, 21, 17, 25-ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.12 18:22:23 +0530

Chief Judicial Magistrate,
Erode.